மே - 20

**"தமக்குரிய சொந்த ஜனங்கள் (ஒரு விசித்திரமான ஜனம்) நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியம் உள்ளவர்கள்." -தீத் 2 : 14.**

"ஒரு விசித்திரமான ஜனம்" உடையில் விசித்திரம் அல்ல, நடத்தையிலுமல்ல, பாஷையிலுமல்ல, முட்டாள்தனமான அர்த்தமற்ற சடங்குகளிலும், சுபாவம், தேகக்கட்டு, இவைகளின் விசித்திரத்திலும் அல்ல, ஆனால், உலகத்திலிருந்தும் உலகத்தின் ஆவியிலிருந்தும் பிரிந்து இருக்கிறதில் அது விசித்திரமானதாயிருக்கிறது. அதற்கு கிறிஸ்துவின் ஆவி உண்டு, அதாவது கர்த்தருக்கு பூரண பிரதிஷ்டையும், உலகமும் அதன் சுயநலமான நோக்கங்களிலிருந்து பிரிந்திருத்தலுமாகிய ஆவி, கர்த்தரின் வார்த்தையைத் தனது ஒரே கற்பனையாகக் கொண்டு அதில் இணைந்திருப்பதில் அது விசித்திரமானது. உலக ஞானம் தெய்வீக வெளிப்படுத்துதலுடன் முரண்படும்போது, அது உலக ஞானத்தைத் தள்ளிவிடுகிறதில் விசித்திரமானது. அது உலகத்திலிருந்தாலும், அது உலகத்திலுண்டானதல்ல என்ற கருத்தில் அது விசித்திரமானது. அதற்கென்று நிச்சயிக்கப்பட்ட ஒரு விசுவாசம் இருக்கிறதினாலும், அதன் விசுவாசத்திற்கு இணக்கமாகவும் வைராக்கியத்துடனும் நடந்து கொள்ளுகிறதினாலும், அது விசித்திரமானது. அது தன்னைத்தானே பலியிட்டு கொண்டிருக்கிறது. மேலும் தன்னுடைய ராஜாவின் சித்தத்தை அறிந்திருக்கிறது. வேறு எந்த சித்தத்தையும் அல்ல, என்ற கருத்தில் அது விசித்திரமானது. மற்றவர்கள் வெறுமையாக யூகித்து ஆச்சரியப்பட்டு சந்தேகப்படும் போது, அது சத்தியத்தை அறிந்து தன்னுள்ளிருக்கும் நம்பிக்கைக்குக் காரணம் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது என்ற கருத்தில் அது விசித்திரமானதாக இருக்கிறது.

**- Z ’97, 95 (R 2127).**

தேவனுடைய ஜனங்களின் விசித்திர தன்மை, தங்களுடைய சுயநலம், உலகத்தனம், பாவ நிறைவு, வஞ்சகத்தனம் (தப்பான போதனைகள் ) ஆகிய இவைகளிலிருந்து பிரிந்திருத்தலிலும் அவருடைய ஊழியத்திற்காக கர்த்தருக்குத் தங்களை பிரதிஷ்டை செய்கிறதிலும் அடங்கியிருக்கிறது. அவரால் சொந்த மாக்கப்பட்டிருக்கிறார்கள். அவருக்காக இருக்கிறார்கள். சத்தியத்தையும் நீதியையும் விருத்தி செய்வதிலுள்ள அவருடைய ஊழியத்திற்காக தயாராக இருக்கிறார்கள் என்ற அர்த்தத்தில் அவர்கள் கர்த்தருக்கு விசித்திரமானவர்கள். அப்படியிருக்கிறதினால், சந்தர்ப்பம் கிடைக்கும்போது எல்லா மனிதருக்கும், விசேஷமாக விசுவாச வீட்டாருக்கும் நல்ல காரியங்களில் ஊழியம் செய்து கொண்டு நன்மை செய்வதில் அவர்கள் ஆர்வத்துடன் சுறுசுறுப்பாய் இருக்கிறார்கள். **- P '26, 61.**

**ஒத்த வாக்கியங்கள்** :- உபா 7:6; 14:2; 26:18; சங் 69:9; 1பேது 2:9; எபே 2:10; தீத் 3:8; கலா 6:7-10; 1கொரி 15:58; 2தெச 3:13; 1தெச 5:15; 1தீமோ 6:18; எபி 13:16.

**கோபுர வாசிப்பு : Z ’14, 515 (R 5460)**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் நன்மை செய்வதில் கர்த்தருக்குச் சொந்தமானவனாக நடந்து கொண்டேனா? எந்தச் சந்தர்ப்பங்களில்? எப்படி? ஏன்? பலாபலன் என்ன ?